05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# ‘THE WRITING PROCESS’ வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MENULIS CERITA DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 MENGGUNAKAN ‘THE WRITING PROCESS’

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

யமுனா த/பெ பாஸ்கரன்

YAMUNAH A/P BHASKARAN

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**‘THE WRITING PROCESS’ வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல்**

**MENINGKATKAN KEMAHIRAN MENULIS CERITA DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 MENGGUNAKAN ‘THE WRITING PROCESS’**

யமுனா த/பெ பாஸ்கரன்

YAMUNAH A/P BHASKARAN

இந்த ஆய்வு தமிழ் மொழிக் கல்வியியல் இளங்கலை பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

LATIHAN ILMIAH INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT

UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DENGAN KEPUJIAN

தமிழ்மொழிப்பிரிவு நவீன மொழித்துறை

மொழி தொடர்பியல் புலம்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODEN

FAKULTI BAHASA DAN KOMUNIKASI

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி**

PERAKUAN KEASLIAN PENULISAN

இந்த உறுதி மொழி.........(நாள்) ........(மாதம்) 2022 அன்று வழங்கப்பட்டது.

Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

i. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar):

தமிழ் மொழி இளங்கலைப் பட்டத்திற்காக மேற்கொள்ளபட்ட **'The writing process வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல்** எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கபட்டது என மொழி தொடர்பியல் புலத்தின் மாணவியாகிய நான் , **யமுனா த/பெ பாஸ்கரன் (D20191089909)** உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு, அவற்றில் மூலங்களை குறிப்பிட்டதோடு, துணைப்புரிந்த அனைத்து மேற்கோள்களும் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்படுள்ளன.

Saya, **YAMUNAH A/P BHASKARAN (D20190189909)** FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **'MENINGKATKAN KEMAHIRAN MENULIS CERITA DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 MENGGUNAKAN 'THE WRITING PROCESS'** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________________

மாணவர் கையொப்பம் / Tandatangan pelajar

II. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia):

**'The writing process வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல்** எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, **யமுனா த /பெ பாஸ்கரன் ( D20191089909)** என்ற மாணவியின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய, முனைவர் பிராங்கிளின் தம்பி ஜோஸ்.எஸ் உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வேடு தமிழ் மொழி கல்வியியல் இளங்களைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்பிக்கப்பட்டது.

Saya, **DR. FRANKLIN THAMBI JOSE SELISTUS DARLING** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **'MENINGKATKAN KEMAHIRAN MENULIS CERITA DALAM KALANGAN PELAJAR TINGKATAN 1 MENGGUNAKAN 'THE WRITING PROCESS'** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

______________________ ______________________________

நாள்/ Tarikh நெறியாளர் கையொப்பம்/Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

'The Writing Process' வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான இந்த ஆய்வைத் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்குத் துணையாக இருந்த இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். இந்த ஆய்வைச் செயல்படுத்த பலர் எனக்கு உதவி புரிந்துள்ளனர். அவ்வகையில், இந்த ஆய்வை மேற்கொள்வதில் எனக்கு வழிகாட்டியாகவும் துணையாகவும் இருந்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரைஞரும் எனக்கு நெறியாளருமான முனைவர் பிராங்கிளின் தம்பி ஜோஸ்.எஸ் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். தொடர்ந்து, இந்த ஆய்வை மேற்கொள்ளும் போது எனக்கு ஊக்கமளித்த எனது பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி, வணக்கம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ஆய்வுச் சாரம்**

‘The Writing Process’ வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் இந்த ஆய்வு அமைந்துள்ளது. மாணவர்கள் கதை எழுதுவதில் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. எனவே, படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல், சிக்கல்களின் காரணங்களைக் கண்டறிதல், ‘The writing process’ வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல் ஆகிய மூன்று நோக்கங்களை முன்னிறுத்தி இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வை அளவுசார், பண்புசார் அணுகுமுறையப் பயன்படுத்தி ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார். பினாங்கு மாநிலத்தில் ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் உள்ள துங்கு பூவான் ஹப்சா என்னும் இடைநிலைப்பள்ளியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் படிவம் ஒன்றின் பத்து மாணவிகளும் இரண்டு ஆசிரியர்களும் ஆய்வு மாதிரியாக உட்படுத்தப்பட்டனர். ஆய்வாளர், இந்த ஆய்விற்கான தரவுகளைக் கருத்தறி வினாப் பாரம், நேர்காணல் வினாத் தொகுதி, மதிப்பீட்டுத் தாள் மூலம் சேகரித்துள்ளார். இந்த ஆய்வு ‘The writing process’ எனும் கோட்பாட்டை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்த உதவியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# ABSTRAK

Kajian ini bertajuk meningkatkan kemahiran menulis cerita dalam kalangan pelajar Tingkatan 1 menggunakan ‘The writing process’. Pelajar didapati mempunyai pelbagai kekurangan dalam penulisan cerita. Oleh itu, kajian ini telah dijalankan dengan tiga objektif iaitu mengenal pasti masalah yang dihadapi oleh pelajar Tingkatan 1 dalam penulisan cerita, mengenal pasti punca masalah dan meningkatkan keupayaan menulis cerita pelajar Tingkatan 1 melalui ‘The writing process’. Pengkaji menjalankan kajian ini menggunakan pendekatan kuantitatif dan kualitatif. Kajian itu dijalankan di Sekolah Menengah Tunku Puan Habsah di Georgetown, Pulau Pinang. Lima belas pelajar perempuan Tingkatan Satu dan dua orang guru telah menjadi sampel kajian. Pengkaji telah mengumpul data kajian ini melalui temu bual, kertas ujian. Kajian ini memfokuskan kepada teori ‘The Writing Process’. Kajian ini telah membantu pelajar tingkatan 1 meningkatkan kemahiran menulis cerita.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்


**நன்றியுரை** ........ i

**ஆய்வுச் சாரம்** ........ ii

ABSTRAK........ iii

**பொருளடக்கம்**........ iv

**குறிவரைவுப் பட்டியல்**........viii

**வரைபடப் பட்டியல்**........ ix

**சொற்குறுக்குப் பட்டியல்** ........ x

**இயல் 1**........ 1

**1.0 முன்னுரை**........ 1

**1.2 ஆய்வுப் பின்னணி** ........ 3

**1.3 ஆய்வுச் சிக்கல்**........ 6

**1.4 ஆய்வு நோக்கம்** ........ 9

**1.5 ஆய்வு வினா** ........ 9

**1.6 ஆய்வுக் கோட்பாடு** ........ 10

**1.7 ஆய்வு முக்கியத்துவம்** ........ 15

**1.8 ஆய்வு எல்லை** ........ 18

**1.9 அய்வுச் சான்றாதாரம்** ........ 19

**1.10 கலைச்சொல் விளக்கம்** ........ 20

**1.11 தொகுப்புரை**........ 22

**இயல் 2**........ 24

**2.0 முன்னுரை**........ 24

**2.1 கோட்பாடு கட்டமைப்பின் விவாதம்** ........ 25

**2.2 'The writing process'** ........ 26

**2.3 கதை** ........ 39

**2.4 தொகுப்புரை**........ 51

**இயல் 3**........ 52

**3.1முன்னுரை**........ 52

**3.2ஆய்வு வடிவமைப்பு**........ 53

**3.3 ஆய்வு அணுகுமுறை**........ 61


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.4 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் ........ 62
3.5 ஆய்வுக் கருவி........ 63
3.6 தரவுகள் சேகரிப்பு முறை ........ 66
3.7 தரவுகள் பகுப்பாய்வு முறை ........ 70
3.8 தொகுப்புரை........ 72
இயல் 4 ........ 73
4.0 முன்னுரை........ 73
4.1 நோக்கம் 1: படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல். ........ 74
4.2 படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களின் காரணங்களைக் கண்டறிதல். ........ 79
4.3 The writing process வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல். ........ 86
4.3.1 முன்னறித் தேர்வு ........ 87
4.3.2 நடவடிக்கை 1 ........ 96
4.3.3 நடவடிக்கை 2........ 100
4.3.4 நடவடிக்கை 3........ 104
4.3.5 நடவடிக்கை 4........ 108
4.3.6 நடவடிக்கை 5........ 112
4.3.7 பின்னறித் தேர்வு ........ 116
4.3.7 முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு இடையிலான சராசரி புள்ளிகள் ஒப்பீடு....... 119
4. 4 தொகுப்புரை........ 122
இயல் 5 ........ 123
5.0 முன்னுரை........ 123
5.1 ஆய்வு முடிவுகளின் சுருக்கம்........ 124
5.2 ஆய்வுக் கருத்துரை ........ 127
5. 3 ஆய்வுத் துறைக்கான முக்கியத்துவம்........ 133
5.4 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் ........ 135
5.5 முடிவுரை ........ 137
துணைநூற்பட்டியல் ........ 138
பின்னிணைப்பு ........ 140

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1 | ஆய்வுக் கால வரையறை | 69 |
| 2 | தரவுகள் பகுப்பாய்வு செய்யும் கணக்கியல் முறை | 70 |
| 3 | நேர்காணல் வினாத் தொகுதி பகுப்பாய்வு | 71 |
| 4 | நேர்காணல் பதில்களைப் பத்தியில் எழுதும் முறை | 71 |
| 5 | படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள். | 75 |
| 6 | ஆசிரியர்களின் சுய விவரம் | 79 |
| 7 | நேர்காணல் வினாத் தொகுதி முடிவுகள் | 80 |
| 8 | முன்னறித் தேர்வின் மாணவர்களின் அடைவுநிலை | 87 |
| 9 | ஐந்து வார நடவடிக்கைகள் | 90 |
| 10 | முதல் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 98 |
| 11 | இரண்டாம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 101 |
| 12 | மூன்றாம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 105 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


13 நான்காம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை 109

14 ஐந்தாம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை. 113

15 மாணவர்களின் பின்னறித் தேர்வு அடைவுநிலை 116

16 மாணவர்களின் முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு இடையிலான சராசரி புள்ளிகள் ஒப்பீடு. 119

17 படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களின் விழுக்காட்டுத் தரவரிசை. 127

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## குறிவரைவுப் பட்டியல்


| குறிவரைவு எண் | பக்கம் |
|---|---|
| 1 படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள். | 77 |
| 2 முன்னறித் தேர்வில் மாணவர்களின் அடைவுநிலை. | 89 |
| 3 முதல் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 99 |
| 4 இரண்டாம் நடவடிக்கையின் அடைவுநிலை | 103 |
| 5 மூன்றாம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 107 |
| 6 நான்காம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 111 |
| 7 ஐந்தாம் நடவடிக்கையின் மாணவர்களின் அடைவுநிலை | 115 |
| 8 மாணவர்களின் பின்னறித் தேர்வு அடைவுநிலை. | 118 |
| 9 மாணவர்களின் முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு இடையிலான சராசரி புள்ளிகள் ஒப்பீடு. | 121 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபடப் பட்டியல்**


| வரைபடம் எண் | பக்கம் |
| --- | --- |
| 1.0 ஆய்வுக் கோட்பாடு | 15 |
| 2.0 ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு | 25 |
| 3.0 ஆய்வு வடிவமைப்பு | 59 |
| 4.0 ஆய்வுக் கட்டமைப்பு | 60 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## சொற்குறுக்குப் பட்டியல்

| | |
|---|---|
| கே. பி.எஸ்.ஆர் (KBSR) | தொடக்கபள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் |
| கே.எஸ்.எஸ்.எம் (KSSM) | இடைநிலைப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் |
| பி.டி 3 PT3 | PENTAKSIRAN TINGKATAN 3 |
| எஸ்.பி.எம் SPM | SIJIL PELAJARAN MALAYSIA |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அறிமுகம்**

**இயல் 1**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.0 முன்னுரை

மனிதனின் வளர்ச்சிக்கு ஊன்றுக்கோலாக விளங்கும் கல்வி மிக முக்கியமாகும். அவ்வகையில், மலேசிய கல்வி மேம்பாட்டுத் திட்டமானது மலேசியாவில் ஒவ்வொரு மாணவரும் உலகத் தரம் வாய்ந்த கற்றல் கருவிகளை அணுக வேண்டும், மேலும் சிறந்த கல்வியினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தலையாய நோக்கமாகக் கொண்டிருக்கின்றது (Nadeson, 2018). இந்த நோக்கத்தை அடைய இடைநிலைப்பள்ளிக்கான கே.எஸ்.எஸ்.எம் கலைத்திட்டம் துணைபுரிகின்றது. இதில், இடைநிலைப்பள்ளியில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்கள் பொது நோக்கமும் பரந்த அறிவும் பெற்றவர்களாகத் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது (KementerianPelajaranMalaysia, 2018). மாணவர்களின் திறன்களை மேம்படுத்த கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஏற்ற அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். அதிலும் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படுத்தும் எழுத்துத் திறனைக் கற்பிப்பது முக்கியமாகும். இதில், எழுதுதல் திறனை வளர்க்கும் கட்டுரைப் பயிற்சி என்பது மொழிப் பாடத்தில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது (k.vijaya, 2017). ஆகவே, இந்த ஆய்வானது கதை எழுதும் திறனை மையமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவ்வகையில், இந்த ஆய்வின் முதல் இயலில் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வுக் கோட்பாடு, ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கலைச்சொல் விளக்கம் ஆகியவற்றை ஆய்வாளர் விவரித்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.2 ஆய்வுப் பின்னணி

மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டதிற்கேற்பவும் (PPPM 2013-2025) தொடக்கப்பள்ளிக்கான கே.எஸ்.எஸ்.ஆர் கலைத்திட்டதின் தொடர்ச்சியாகவும் இடைநிலைப்பள்ளிக்கான கே.எஸ்.எஸ்.எம் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது (KementerianPelajaranMalaysia, 2018). இதில், அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றைக் கைவரப்பெறுவதற்கு ஏற்ப தமிழ் மொழி கலைத்திட்டதில் உள்ளடக்கத்தரமும் கற்றல் தரமும் அமைக்கப்பட்டுள்ளன (Rudrapathy, 2022). தற்போது தமிழ்மொழி மாணவர்களின் தாய்மொழிக் கல்வி (POL) முறையிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முழுநேரமாகவும் வகுப்பில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஐந்தாம் படிவத்தில் எஸ்.பி.எம் (SPM) தேர்வில் அங்கீகரிக்கப்பட்ட பாடமாகத் தமிழ்மொழி விளங்குகின்றது (Subramaniam, 2020).

இடைநிலைப்பள்ளி தமிழ் மொழிப் பாடத்தில் எழுத்துத் திறன் முக்கியக் கூறாக அமைகின்றது. எழுதுதல் என்பது தனித்திறன், எல்லாராலும் எளிதில் கையாள முடியாத ஒரு திறனாகும் (k.vijaya, 2017). ஆகவே, எழுத்துத் திறனில் மாணவர்கள் ஆளுமை பெற பல அணுகுமுறைகளை ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் கையாண்டு வருகின்றனர். எழுத்துச் சிந்தனையை வெளிப்படுத்தும் ஒரு வடிவம் மட்டுமல்லாமல் சிந்தனையாற்றலை மேம்படுத்தும் ஓர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஊடகமாகவும் விளங்குகின்றது (Thamburaj, 2020). இதனால், பள்ளித் தேர்வுகளிலும் எஸ்.பி.எம் போன்ற அரசாங்கத் தேர்வுகளிலும் அதிகமாக எழுத்துத் திறனில் மாணவர்கள் சோதிக்கப்படுகின்றனர். குறிப்பாகத், தமிழ் மொழி தாள் ஒன்று கட்டுரை எழுதும் திறனை மையமாகக் கொண்டுள்ளது. இதனால், மாணவர்கள் எழுத்துத் திறனில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

படிவம் ஒன்றிற்கான தர அடிப்படையிலான பாடத்திட்ட மதிப்பீடு ஆவணத்தில் (DSKP) மாணவர்கள் கற்றல் கற்பித்தலின் இறுதியில் பல்வகை எழுத்துப் படிவங்களை நல்ல படைப்பாற்றலுடனும் விளைப்பயனுள்ள வகையிலும் படைத்தல் எனும் நோக்கம் காணப்படுகின்றது (KementerianPelajaranMalaysia, 2018). இதில், கதை எழுதும் திறனானது உள்ளடக்கத் தரத்தில் குறிப்பிடப்பட்ட பல்வகை எழுத்துப் படிவங்களினுள் ஒன்றாகும். மேலும், கதை எழுதவர் எனும் கற்றல் தரம் படிவம் ஒன்று மட்டுமின்றி படிவம் இரண்டு, நான்கு, ஐந்திலும் காணப்படுகின்றது. இந்தக் கற்றல் தரங்களில் மாணவர்கள் எழுத வேண்டிய சொற்களின் எண்ணிக்கைகள் மாறுப்பட்டுள்ளன. அதாவது, படிவம் ஒன்றில் 140 சொற்களும் படிவம் இரண்டில் 160 சொற்களும் படிவம் நான்கில் 220 சொற்களும் படிவம் ஐந்தில் 250 சொற்களும் கொண்டு மாணவர்கள் கதை எழுதுவர். ஒவ்வொரு படிவதிற்கான பாடப்புத்தகங்களில் சான்றுக் கதைகள் கொடுக்கப்பட்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. கதையின் தொடக்கதைக் கொடுத்து அதனைக் கூடுதலாக நிரல்படுத்தி எழுதும் விதமாகவும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கதை எழுதுவதாகவும் மாணவர்களுக்கான பயிற்சிகள் பாடப்புத்தகங்களில் காணப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே தேர்வுகளிலும் கதை தொடர்பான கேள்விகள் இடம்பெறுகின்றன. ஆகவே, மாணவர்கள் சிறந்த படைப்பாற்றல் மிக்க கதைகள் எழுத பயிற்சி பெறுவதும் அவசியமாகக் கருதப்படுகின்றது.

கதை எழுதுவதில் தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், சிக்கல் அவிழ்ப்பு, முடிவு ஆகிய கூறுகள் அடிப்படையாக விளங்குகின்றன. இதனை முறையாகப் பின்பற்றி மாணவர்கள் கதையை வடிவமைக்க வேண்டும். இதற்கான வழிகாட்டுதலாகப் பாடப்புத்தகத்தில் விரிவான விளக்கங்கள் குறைவாகவே காணப்டுகின்றன. கொடுக்கப்படும் ஒரு சான்றுக் கதையைக் கொண்டு மாணவர்கள் சுயமாகக் கதையை எழுதுவது இயலாத காரியமாகின்றது. கதை எழுதுவதன் ஒவ்வொரு கூறினாக் முக்கியத்துவத்தையும் அதனை எழுதும் வழிமுறைகளையும் தெளிவாக மாணவர்களுக்கு விவரிக்கப்பட வேண்டும். இந்தக் கூறுகள் ஒவ்வொன்றையும் சரியாகக் கட்டமைத்து முழுக் கதையை உருவாக்குவதற்கான அணுகுமுறையை மாணவர்களிடத்தில் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

அவ்வகையில், மாணவர்கள் கதை எழுதும் திறனில் செம்மை பெற 'The writing process' அணுகுமுறை உதவுகின்றது. இந்த அணுகுமுறையானது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஒவ்வொரு படிநிலையாக எழுதுவதை மையப்படுத்தி இருப்பதால் ஒவ்வொரு கதைக் கூறுகளையும் திட்டமிட்டு வடிவமைப்பதற்கு இஃது ஏற்ற அணுகுமுறையாக விளங்கும். மேலும், தொடக்கத்திலேயே படிவம் ஒன்றில் மாணவர்களுக்கு இந்த அணுகுமுறைக் கொண்டு கதை எழுதுவது கற்பிக்கப்பட்டால் தொடர்ந்து வரும் படிவங்களில் அவர்களின் கதை எழுதும் ஆளுமை தொடர்ச்சியாக மேம்படையும். இதனால், இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.3 ஆய்வுச் சிக்கல்**

தொடக்கப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி வரை தமிழ்க் கல்வியில் மாணவர்கள் அடைவுநிலையை நிர்ணயிப்பதில் எழுத்து முக்கியப் பங்கை வகிக்கின்றது (M.Meenu, 2021). இருப்பினும், இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே எழுதும் திறனில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன (Stephanie, 2021). மாணவர்களின் எழுத்துத் திறனில் புத்தாக்கச் சிந்தனை இன்மை, எழுத்துபிழைகள், நடை தெளிவின்மை, கருத்துத் தெளிவின்மை, கோர்வையின்மை போன்ற குறைப்பாடுகள் காணப்படுகின்றன என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Widodo, 2019). தொடக்கப்பள்ளியிலிருந்து இடைநிலைப்பள்ளிக்குச் செல்லும் படிவம் 1 மாணவர்கள் கட்டுரை எழுதுவதில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பல சிக்கல்களை எதிர்நோக்குவதால் அவர்களின் கட்டுரைத் தரம் மேம்படுவதில்லை (Arici, 2019).

குறிப்பாக, கதை எழுதுவதில் மாணவர்கள் அதிக நாட்டங்கொள்ளாத நிலை உள்ளது (Aziz, 2018). ஏனெனில், ஆசிரியர்கள் கதை எழுத முறையான பயிற்சி கொடுக்காததால் மாணவர்கள் கதை எழுதும் முறையையும் அதன் முக்கியக் கூறுகளையும் அறிவதில்லை. இதனால், கதை எழுதுதலை உட்படுத்தியக் கேள்வியை மாணவர்கள் தேர்வின் போது தேர்ந்தெடுப்பதும் குறைவாக உள்ளது (Alkaaf, 2018). கதை எழுதுவதில் சரியான வழிக்காட்டல் இல்லாமை, ஆசிரியர்கள் சரியான அணுகுமுறையைப் பயன்படுத்தி ஊக்கமளிக்காமை போன்ற காரணங்களினால் மாணவர்கள் கதை எழுதுவதில் தயக்கம் காட்டுகின்றனர் (Akyol, 2020). இந்தச் சிக்கல் கையாளப்படாத நிலையில் மாணவர்களிடையே நாளடைவில் கதை எழுதுவது கடினம் என்ற மனநிலை ஏற்படுவதுடன் மாணவர்களின் ஆர்வமும் குன்றி விடுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், சில முந்தைய ஆய்வுகள் வழி மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் அறியப்பட்டுள்ளன. மாணவர்களின் கதைகளில் முக்கியக் கதைக் கூறுகள் விடுபட்டுப் போகுதல், கதையின் கருப்பொருளுக்கு ஏற்ற சூழலும் கதாபாத்திரங்களும் அமையாமை, கதையில் ஈர்ப்பு இன்மை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


போன்ற குறைகள் காணப்படுவதை Fatmaa Alkaaf (2018) அவர்கள் விளக்கியுள்ளார். மற்றோர் ஆய்வுக் கட்டுரையில் Mrs.K.Deepa (2019) அவர்கள், மாணவர்கள் கதை எழுதுவது கடினம் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதால் ஆர்வம் காட்டுவதில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இதற்கான காரணமாக, கதை எழுதுவதற்கு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதமான அணுகுமுறைகளை ஆசிரியர்கள் கையாளுவதில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இதன் வழி, மாணவர்களுக்கு ஏற்புடைய அணுகுமுறையைப் பயன்படுத்தாதவரை, கதை எழுதுவதன் ஆர்வம் முற்றிலும் இல்லாமல் போகும் என்பது அறியப்படுகின்றது. இதற்கான தீர்வாக, மாணவர்களைக் குறிப்பிட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நெறிமுறையின் கீழ் செயல்படுத்தும் விதமான கதை எழுதும் அணுகுமுறை அவசியமாகின்றது. இந்தச் சிக்கல்கள் வழி மாணவர்களை முறையாக வழிநடத்தும் அணுகுமுறையை ஆசிரியர்கள் கையாள வேண்டும் என்பது அறியப்படுகின்றது.

அவ்வகையில் மாணவர்கள் கதை எழுதுவதை ஊக்குவிப்பதில் ‘The writing process’ அணுகுமுறை உதவுகின்றது. இந்த அணுகுமுறையில் மாணவர்கள் தங்களின் கதைக் கூறுகளைச் சரியாகத் திட்டமிட்டு, அவ்வப்போது சரிபார்த்துத் திருத்தங்களை மேற்கொண்டு ஆசிரியரின் கருத்துக்கு ஏற்ப கதையை மேம்படுத்திக் கொள்வர். இதன் அடிப்படையில், ஒவ்வொரு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


படிநிலையாக கதையை வடிவமைக்க இந்த அணுகுமுறை துணைபுரியும். ஆகவே, 'The writing process' அணுகுமுறையை பயன்படுத்தி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்த இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் நோக்கமானது:

I. படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

II. படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களின் காரணங்களைக் கண்டறிதல்.

III. 'The writing process' வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல்.

## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வின் நோக்கதிற்கான வினாக்கள்:

I. படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


II. படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்கள் என்ன?

III. The writing process வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை எவ்வாறு மேம்படுத்துவது?

**1.6 ஆய்வுக் கோட்பாடு**

நிரல்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையைக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் போது நாளடைவில் அதனைப் பின்பற்றப் பழகிக்கொள்வர். அவ்வகையில், ஆய்வாளர் படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்த 'The writing process கோட்பாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளார். இந்தக் கோட்பாட்டின் வழி மாணவர்கள் கதை எழுதுவதில் ஆசிரியர்கள் வழிநடத்தவும் அவர்களை மேம்படுத்தவும் துணைபுரிந்துள்ளது.

அமெரிக்கப் பத்திரிக்கையாளரும் ஆங்கிலப் பேராசிரியருமான Donald Morison Murray அவர்கள் The Writing Process கோட்பாட்டை 1972ஆம் ஆண்டு அறிமுகம் படுத்தினார். 26 ஆண்டுகளாக University of New Hompshireஇல் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவத்தை இவர் கொண்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவர் இயற்றிய Crafting a Life எனும் புத்தகத்தில் எழுத்துத் திறனை மேம்படுத்தும் வழிமுறைகளைத் தனது அனுபவத்தின் வழி எடுத்துரைத்துள்ளார். வாசகர்களின் நிலையிலிருந்து சிந்துத்து எழுத வேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும். எழுதுதல் என்பது முடிவற்ற செயல்முறை என்பதையும் Murray அவர்கள் வலியுறுத்துகிறார். இந்த எழுத்துத் திறனைக் கற்பிக்கும் அணுகுமுறையில் ஆசிரியர் மாணவர்களை முன்னிறுத்திச் செயல்படுவது அவசியம் எனப்படுகின்றது. அதாவது, ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருந்து மாணவர்களின் எழுத்தாற்றல் மேம்பட ஊக்கப்படுத்துவர். இந்தக் கோட்பாட்டில் ஐந்து முக்கிய படிநிலைகள் காணப்டுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முதலாவதாக, 'prewriting' எனும் படிநிலையில் எழுதுவதற்கு முன் திட்டமிடும் நடவடிக்கையை மாணவர்கள் மேற்கொள்வர். இந்தப் படிநிலையில் மாணவர்கள் நேரத்தை ஒதுக்கி தலைப்பிற்கு ஏற்ற தகவல்களையும் ஏடல்களையும் திட்டமிடுவர். எழுதுவதற்கு முன் கருப்பொருளை அறிதல், ஒவ்வொரு கதைக் கூறுகளின் கட்டமைப்புகளைத் திட்டமிடுதல், தகவல்களைச் சேகரித்தல், கிடைத்த தகவல்களை நிரல்படுத்துதல், ஆகிய நடவடிக்கைகளை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். தகவல்களைத் திரட்டும் போது வாழ்வியல் அனுபவங்களையும் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சம்பவங்களையும் அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் சிந்திப்பர். எழுதத் தொடங்கும் முன் தேவையான தகவல்களைத் திரட்டி, சிறு குறிப்புகளாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எழுதிக்கொள்வதால் மாணவர்களினால் தயார் நிலையில் இருக்க முடிகின்றது. இந்தப் படிநிலையில் 'freewriting', 'clustering', 'outlining' ஆகிய உத்திகளை மாணவர்கள் கையாளலாம். 'freewriting' என்பது இலக்கணம், எழுத்துப்பிழை, நிறுத்தக்குறிகள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தாமல் முக்கியக் கூறுகளை மட்டும் அறிந்து எழுதுவதாகும். 'clustering' என்ற உத்தியானது வரைப்படங்களைக் கொண்டு ஏடல்களை நிரல்படுத்துவதாகும். இதனால், மாணவர்கள் சிந்தித்த கருத்துகளை எளிமையாகப் பார்க்கும் படி வடிவமைக்க இயலும். வரைபடத்தின் நடுவே தலைப்பை எழுதி அதைச் சுற்றி, சிந்தித்த ஏடல்களை மாணவர்கள் எழுதுவர். அடுத்து 'outlining' என்ற உத்தியில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மாணவர்கள் கருத்துகளைச் சிறு வாக்கியங்களாக வரிசைப்படுத்துவர்.

அடுத்ததாக, 'drafting' எனும் படிநிலையில் திட்டமிட்டவற்றை மாணவர்கள் வாக்கிய அமைப்பில் விரிவாக எழுதத் தொடங்குவர். இந்தப் படிநிலையின் போது மாணவர்கள் எழுதுப்பிழை, இலக்கணப்பிழை, சொல்லாட்சி போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டியதில்லை. திட்டமிட்ட கூறுகளை விரிவாக்கம் செய்வதற்கு மட்டும் மாணவர்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டும். ஏனெனில், இதில் அதிக நேரம் செலவளிக்காமல் திட்டமிட்டப்படி மாணவர்கள் தோன்றும் கருத்துகளை எழுத முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மூன்றாவதாக, 'Revision' என்பது எழுதியதைச் சீரமைத்தலாகும். மாணவர்கள் தாம் எழுதியதை மீண்டும் வாசித்துக் காணப்படும் குறைகளைச் சரி செய்வர். இந்தப் படிநிலையிலேயே மாணவர் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை, சொற்பிழை ஆகியவற்றைக் கண்டறிந்து திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இதனை மேற்கொள்ள 'A.R.R.R' உத்தி துணைபுரிகின்றது. தொடக்கமாக, விடுபட்ட தகவல்களைச் சேர்த்தல், சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் கூடுதலாக எழுதுதல் போன்றவை 'Add' என்பதைக் குறிக்கின்றது. 'Rearrage' என்பதில் எழுதிய கருத்துகள் கோர்வையாக இருப்பதைச் சரி பார்க்க வேண்டும். மூன்றாவதாக, 'Remove' என்ற கூறானது தொடர்பில்லா விளக்கங்களை நீக்கம் செய்வதாகும். இதனால், மாணவர்கள் ஏற்புடைய கருத்துகள் மட்டும் இருப்பதை உறுதி செய்து தலைப்பை ஒட்டி விலகாமல் இருக்க முடியும். இறுதியாக, 'Replace' மாணவர்களுக்கு முன்னர் எழுதியதை விட ஏற்புடைய கருத்துத் தோன்றுமானால் அதில் மாற்றம் மேற்கொள்வதாகும்.

நான்காவது படிநிலை 'Editing' ஆகும். இதில், மாணவர்கள் மொழிப் பயன்பாடு, வாக்கிய அமைப்பு, நிறுத்தக்குறிகள் போன்றவற்றைச் சரிபார்த்துத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



திருத்தங்களை மேற்கொள்வர். தமது படைப்பில் எல்லாக் கூறுகளும் சரியாக உள்ளதை மாணவர்கள் இந்தப் படிநிலையில் உறுதி செய்துகொள்வர்.

இறுதியாக, மாணவர்கள் முழுமையாக எழுதிய படைப்பை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வர். இதனை 'Review' என்று குறிப்பிடுவர். சக மாணவர்கள், ஆசிரியர்கள் முன்பு தாம் எழுதுயதை மாணவர்கள் வாசிப்பர். பிறகு, அதனையொட்டி மற்றவர்கள் தமது கருத்துகளைப் பரிமாறிக்கொள்வர். இந்தக் கலந்துரையாடலின் போது குறை நிறை இரண்டுமே சுட்டிக்காண்பிக்கப்படும். ஆகையால், மாணவர்கள் தமது பலம் பலவீனத்தை அறிந்து அதன்படி தமது படைப்பை மேம்படுத்திக்கொள்ள முடியும். மற்றவர் முன்னிலையில் வாசித்து அவர்களின் கருத்துகளைச் செவிமடுக்கும் போது மாணவர்களிடையே எழுதுவதற்கான ஆர்வமும் தன்னம்பிக்கையும் உண்டாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi






**1.0 வரைபடம் ஆய்வுக் கோட்பாடு**

05-4506832 pustaka.upsi.edu.my PustakaTBainun ptbupsi

### 1.7 ஆய்வு முக்கியத்துவம்

'The writing process' என்னும் கோட்பாட்டின் வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் வழி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகத்தினர் ஆகிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தரப்பினர்களுக்கு நன்மை விளைகின்றது. இதனால், இந்த ஆய்வு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

➢ ஆசிரியர்கள்

இந்த ஆய்வின் மூலம் ஆசிரியர்கள் விளைப்பயன்மிக்க முறையில் கதை எழுதக் கற்பிக்க இயலும். 'The writing process அணுகுமுறையில் ஆசிரியர்கள் தகவல் அளிப்பவர், கண்காணிப்பாளர், ஊக்கப்படுத்துபவர், கருத்து வளங்குபவர், மதிப்பிடுபவர் ஆகிய நிலையில் இருந்து கற்பிப்பதால் மாணவர்களைக் கண்டிப்பாகக் கதை எழுதுவதில் மேம்படுத்த முடியும். அவ்வகையில், மாணவரை மையப்படுத்தி, கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவதால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆசிரியர்களுக்கு இந்த அணுகுமுறை ஏற்புடையாதாக அமைகின்றது. ஒவ்வொரு படிநிலையிலும் எவ்வாறு மாணவர்கள் செயல்பட வேண்டும் என்பதை ஆசிரியர்கள் விளக்கிக் கற்பிக்கும் போது எளிமையாகக் கற்றல் கற்பித்தல் நோக்கத்தை அடைய முடிகின்றது. சான்றாக, கதையை எழுதத் தொடங்கும் முன் எவ்வாறு திட்டமிட வேண்டும் என்பதைக் கற்பிப்பதனால் மாணவர்கள் எழுதத் தொடங்கும் போது ஏற்படும் தடையை ஆசிரியர்கள் சரி செய்ய முடியும். ஒவ்வொரு மாணவரின் சிக்கல்களைக் கண்டறிந்து அவர்களின் கதையை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியர்களுக்கு இந்த ஆய்வு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


துணைப்புரிகின்றது. இதனால், மாணவர்கள் கதை எழுதுவதில் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டி அதனை மேம்படுத்தவும் முடிகின்றது.

- மாணவர்கள்

கதை எழுதுவதை மாணவர்களிடம் ஊக்கப்படுத்தவும் ஆர்வத்தை உண்டாக்கவும் இந்த ஆய்வு துணைப்புரிகின்றது. கதை எழுதுவதில் உள்ள முக்கியக் கூறுகளையும் அதன் கட்டமைப்புகளையும் நன்கு அறிந்து தரமான படைப்பை மாணவர்கள் உருவாக்க முடியும். இதனால், தேர்வுகளில் சிறந்து விளங்குவது மட்டுமின்றி பிற போட்டிகளிலும் தமது திறமையை மாணவர்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தயக்கமின்றி வெளிப்படுத்துவர். ஏனெனில், தொடர்து கதை எழுதப் பயிற்சி அளிக்கும் விதமாக இந்த அணுகுமுறை அமைவதால் மாணவர்கள் தம்மை மேம்படுத்திக்கொள்வர். சான்றாக, ‘The writing process’ முதல் படிநிலையில் புத்தாக்கச் சிந்தனை மிக்க கதைக் களத்தை மாணவர்கள் சிந்தித்து, கதையைக் கட்டமைக்க முடிகின்றது. மேலும், சீரமைப்புகள், திருத்தங்கள் ஆகியவற்றை மேற்கொண்டவுடன் இறுதியாகத் தமது கதையை வாசித்து மற்றவரின் கருத்துகளைக் கேட்டு, கதையை மேம்படுத்துவர். ஆகவே இதன் வழி மாணவர்கள் கதை எழுதுவதில் படைப்பாற்றல் திறனையும் புத்தாக்கச் சிந்தனையையும் அடைய முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


- பள்ளி நிர்வாகம்

இந்த ஆய்வின் வழி தரம் வாய்ந்த கதை எழுதும் மாணவர்களை உருவாக்க முடிவதால் மாணவர்கள் கல்வி கேள்விகளிலும் தமிழ் மொழி சார்ந்த மற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டு பள்ளியின் பெயருக்குப் புகழ் சேர்ப்பர். இதனால், பள்ளியின் தரம் உயர்வதோடு பள்ளியில் பயனுள்ள கற்றல் கற்பித்தலையும் அமல் படுத்த முடியும்.

### 1.8 ஆய்வு எல்லை

பினாங்கு மாநிலத்தில் ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் உள்ள துங்கு பூவான் ஹப்சா என்னும் இடைநிலைப்பள்ளியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் படிவம் ஒன்றின் பத்து மாணவிகளும் இரண்டு ஆசிரியர்களும் ஆய்வு மாதிரியாக உட்படுத்தப்பட்டுள்ளனர். படிவம் 1 மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் கண்டறிய மாணவர்களிடம் மதிப்பீட்டுத் தாள் கொடுக்கப்பட்டுள்ளது. சிக்கலுக்கான காரணங்களை அறிய இரண்டு தமிழ் ஆசிரியர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து, 'The writing process' வழி மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்த முன்னறித் தேர்வும் பின்னறித் தேர்வும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வு 'The writing process' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9 அய்வுச் சான்றாதாரம்

இந்த ஆய்வில் 'The writing process' அணுகுமுறையும் கதை எழுதும் திறனும் முதன்மைச் சான்றாதாரமாக அமைந்துள்ளது. பினாங்கு மாநிலத்தில் உள்ள துங்கு பூவான் ஹப்சா என்னும் இடைநிலைபள்ளியில் 10 மாணவிகளும் 2 ஆசிரியர்களும் இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆய்வில், மாணவர்களிடையே கருத்தறி வினாப் பாரம் கொடுக்கபட்டதோடு, இரண்டு ஆசிரியர்களிடையே நேர்காணலும் மாணவர்களிடைய முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு ஆகியவை நடத்தப்பட்டுள்ளது. இதன் வழி மாணவர்கள் கதை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களும் அதற்கான காரணங்களும் கண்டறியப்படுவதோடு 'The writing process' அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் வழி மாணவர்களின் கதை எழுதும் திறன் மேம்படுவதும் அறியப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு 'The writing process' அணுகுமுறையும் கதை எழுதும் திறனும் முதன்மை சான்றாதாரமாக விளங்குகின்றது. இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு மேற்கோளாகப் பல ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், புத்தகங்கள் ஆய்விதழ்கள் போன்றவை துணைச் சான்றாதாரமாக அமைந்துள்ளன. மேலும், கல்வி அமைச்சு உருவாக்கிய கலைத்திட்டம், பாடப்புத்தகங்கள், இளங்கலையில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் போன்றவை இந்த ஆய்வை மேற்கொள்ள துணைபுரிந்துள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.10 கலைச்சொல் விளக்கம்**

'The writing process' வழி படிவம் 1 மாணவர்களின் கதை எழுதும் திறனை மேம்படுத்துதல் என்ற ஆய்விற்கு இரண்டு கலைச் சொற்கள் காணப்படுகின்றன. அவை, 'The writing process' மற்றும் கதை ஆகும்.

- 'The writing process'

'The writing process' என்பது மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனையை வலியுறுத்துவதோடு படைப்பாற்றலை மேம்படுத்தும் அணுகுமுறையாகக் கருதப்படுகின்றது (Alodwan, 2019). இதனை Donald Morisan Murray என்பவர் 1972ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். முழுமையான படைப்பை உருவாக்குவதில் சில படிநிலைகளை இந்த அணுகுமுறை கொண்டுள்ளது. அவை, திட்டமிடுதல், வரைதல், சீரமைத்தல், திருத்துதல், மதிப்பிடுதல், ஆகிய ஐந்து படிநிலைகளாகும். சிறந்த படைப்பை உருவாக்குவதற்கு ஒவ்வொரு படிநிலையும் மிக அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இந்த அணுகுமுறையில் மற்ற கூறுகளை விட புத்தாக்கச் சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. கற்றல் கற்பித்தலுக்கு இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தும் போது ஆசிரியர் மாணவர்களின் இறுதிப் படைப்பைப் பெற்றவுடன் அதன் குறை நிறைகளைக் கண்டறிந்து தனது கருத்தைக் கூறவார். அதற்கேற்ப மாணவர்கள் தமது படைப்பின் தரத்தை மேம்படுத்திக் கொள்வர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகவே, இந்த அணுகுமுறையில் மாணவர்களின் பங்கு அதிகமாக இருப்பதால் இது மாணவர்களை மையப்படுத்திய அணுகுமுறையாக அமைகின்றது (St. Asriati AM., 2019).

- கதை

கதை என்பது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை எழுத்தாளரின் கண்ணோட்டத்திலிருந்து கற்பனை, வர்ணனை போன்றவற்றைக் கொண்டு விவரிப்பதாகும். கதையின் முக்கியக் கூறுகளாகக் கருப்பொருள், உத்தி, பாத்திரப்படைப்பு, பின்னணி, கதை அமைப்பு ஆகியவை விளங்குகின்றன (Hong, 2021). கதையைக் கட்டமைக்கும் போது தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், சிக்கல் அவிழ்ப்பு, முடிவு ஆகியவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமாகும். கதையின் தொடக்கம் வாசகர்களுக்கு ஆர்வம் அழிக்கும் விதமாக அமைந்து முதன்மை சம்பவத்தை விளக்குவதோடு முடிவில் அதன் விளைவை எடுத்துரைக்க வேண்டும் (Thorsten, 2019). கதையை எழுதும் எழுத்தாளர் தனது வாழ்வில் கடந்து வந்த அனுபவங்களை மையமாகக் கொண்டும் கதையை வடிவமைக்கலாம். தமது அனுபவத்திலிருந்து கதையை உருவாக்குவது மாணவர்களுக்குச் சவாலானதாக அமையக் கூடும். ஏனெனில், கதையில் விவரிக்கப்படும் சம்பவங்கள் வாசகர்களுக்குத் தெளிவாகப் புரியும் படி மொழியைக் கையாள வேண்டியுள்ளது. ‘நான்’ என்ற தன்மைச் சொல்லைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொண்டு கதையை எழுதுவது வாசகர்களைக் கதையினுள் இணைக்கச் செய்யும். கதையை வாசகர்கள் தமது வாழ்வியலோடு தொடர்புபடுத்தும் விதமாக அமைந்தால் அது சிறந்த படைப்பாகக் கருதப்படும். அடுத்து என்ன நிகழும் என்ற ஆவலை வாசகர்களின் மனதில் எழச் செய்வது சிறந்த கதைக்கு வித்திடும் (Fajri, 2020). இதற்கு அடித்தளமாக இருக்கும் கதைக் கூறுகளும் கதைக் கட்டமைப்புகளும் முக்கியப் பங்கை வகிக்கின்றன.

## 1.11 தொகுப்புரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 1இல் தமிழ் மொழி கலைத்திட்டம், தேர்வு அமைப்பு ஆகியவை ஆய்வுப் பின்னணியில் விளக்கப்பட்டுள்ளது. அடுத்து, ஆய்வுச் சிக்கலில், கதை எழுதுவதை ஆசிரியர்கள் கற்பித்தில் எதிர்நோக்கும் சிக்கல்களும், மாணவர்களின் நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஆய்வின் மூன்று நோக்கங்களும் அதற்கேற்ற ஆய்வு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமையும் 'The writing process' கோட்பாடு விவரிக்கப்டுள்ளது. பிறகு, இந்த ஆய்வின் வழி ஆசிரியர்கள், மாணவர்கள், பள்ளி நிர்வாகத்தினர் ஆகிய தரப்பினர் அடையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நன்மைகள் ஆய்வு முக்கியத்துவத்தில் விளக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக, ஆய்வாளர் தேர்ந்தெடுத்த பள்ளியில் 10 மாணவிகளும் 2 ஆசிரியர்களும் உட்படுத்தப்பட்டது ஆய்வு எல்லையாக விளங்குகின்றது. இறுதியாக, 'The writing process', கதை ஆகியவை கலைச்சொற்களாக அமைந்து அதற்கான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi